ரூ. 8.00



மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2047 ஆடி - ஆவணி
ஆகஸ்ட் - செப்டம்பர் 2016

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2047	மாதம் : ஆடி - ஆவணி
மலர் : 30	இதழ் : 7-8

அன்பே வாழ்வு

"மக்கள் சிந்தனை"க்கு எழுதிய தலையங்கக் கட்டுரைகளின் தொகுப்பு "அன்பே வாழ்வு" என்ற நூலாய் மலர்ந்துள்ளது. போற்றுதலுக்குரிய மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். மகாதேவன் அவர்கள் "அன்பே வாழ்வு" நூலினை வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். அற்புதமான சிறப்புரை ஆற்றினார்கள்.

"அன்பே வாழ்வு". வாழ்க்கையின் அடித்தளம் அன்பு என்ற அச்சில் சுழல்கிறது. அன்பின் வழியது தான் "உயிர்நிலை" என்றார் திருவள்ளுவர். அன்புதான் உயிர் வாழ்வதன் அடையாளம்.

வாழ்க்கையின் அறம், இரண்டு நிலைகளில் இயங்குகின்றது.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று திருவள்ளுவர் இல்லத்து அறனை அடையாளப்படுத்துகிறார். இளையான்குடி மாற நாயனார் இல்லறத்தைப் போலப் பசிப்பிணி போக்கும் நல்லறம் பேணுதல் வேண்டும். விருந்து ஓம்பி வாழ்பவன் விளைநிலத்தில் விதையிடத் தேவையில்லை என்று "விருந்தோம்பி வாழும் இல்வாழ்வை" திருவள்ளுவர் பெருமைப் படுத்தினார்.

"தன்னலம் துறந்து வாழும் துறவறம்" என்று திருவள்ளுவர் துறவறத்து அறனையும் அடையாளப்படுத்துகிறார்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

என்றார் திருவள்ளுவர். துறந்தவர் பெருமை அளவிடற்கரியது.

துறந்தாரில் தூய்மையராய், மக்கள் மனங்களில் நிறைந்தவராய் விளங்கும் நமது மகாசன்னிதானத்தின் கால்கள் கீழ வெண்மணியை நோக்கி விரைந்து சென்ற கால்கள்!

மண்டைக்காடு மதக்கலவரத் தீயை அடக்க விரைந்து சென்ற கரங்கள் மகாசன்னிதானத்தின் திருக்கரங்கள்!

ஏழைகளின் துயர் கண்ட பொழுதெல்லாம் அழுத விழிகள்!

சீன யுத்த நிதிக்காகத் தம் உருத்திராக்கத்தினை அளித்த தேசியத் துறவி நம் அடிகள் பெருமான்!

பல்லக்கை மறுதலித்த மடாதிபதி! ஒருநாள் மட்டும் அவர் இறுதி யாத்திரையின்போது அவர் திருமேனியைப் பல்லக்கில் உலகமே சுமந்து சென்றது. "தமிழே! தமிழே! எங்களைத் தவிக்கவிட்டு நீ எங்கே சென்றாய்?" என்று கையறு நிலையில் நாம் அழுது புலம்பிய நேரம். இந்தச் சிறிய குருவியின் தலையில் இமயத்தின் சுமை இறக்கப்பட்ட நேரம்! இருந்த போதும் நம்பிக்கைச் சிறகை நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையில் உயரப் பறந்து உலகை வலம் வருவோம் என்று நம் பணிகளைத் தொடங்கிய தருணம்.

தென்மாவட்ட சாதிக் கலவரத்தின்போது அமைதிப் பணியாற்றினோம். அங்கே சொந்தச் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். அழிப்பவர்களும் அழிபவர்களும் தமிழர்கள் என்பதையும், தாங்கள் அனைவரும் உழைக்கும் மக்கள் என்பதையும் மறந்து போனார்கள்.

குடிசைகளுக்கு தீப்பிடித்து எரியாத மேற்கூரை ஓடுகள் அரசு நிதி உதவி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இருதரப்பு மக்களுக்கும் அமைதியை சமாதானத்தின் மூலம் ஏற்படுத்தப் பெரு முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டன. நிரந்தர அமைதியை - சமாதானத்தை உருவாக்கும் திட்டமாக பெரியார் நினைவுச் சமத்துவபுரம் மலர்ந்து உதவியது. தென் மாவட்டங்களில் தொழில் வளத்தை மேம்படுத்த நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது, என்றும் அமைதியுள்ள சகோதரத்துவத்தின் இருப்பிடமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்பது தான் நமது பிரார்த்தனை.

கோவை மாவட்டத்தில் குண்டுகள் வெடித்த கலவரப் பகுதிகளிலும் நமது அமைதிப் பணிகள் தொடர்ந்தன. நல்லிணக்கத்தின் விதைகள் சமய நல்லிணக்கக் கூட்டங்களின் மூலம் விதைக்கப்பட்டது. கடவுள் அருளால் அமைதியும், நட்பும் கலந்த நல்லிணக்கச் சூழல் மலர்ந்தது.

சுனாமி என்ற பெரும் பிரளயம் உலகத்தைப் புரட்டிப் போட்டத் தருணம். தமிழகத்தில் நாகை மாவட்டம் சுனாமியின் கடுமையானத் தாக்குதலுக்கு உள்ளானது. ஒரு ஊரில் ஒரு மயானம் இருக்கும். ஆனால், ஊர்களே ஒட்டு மொத்த மயானம் ஆகிவிட்டச் சூழல். பலருக்கும் உறவுகள் இன்றி ஒற்றை மரமாகி விட்ட நிலை. அழுகி, நாற்றமாகி, ஊறிப் போன அடையாளம் தெரியாத சடலங்களைத் தம் தோள்களில் தூக்கிச் சென்ற திரு. டாக்டர். கே.பாலகிருஷ்ணன் அவர்களின் பணி நம்மை மெய் சிலிர்க்க வைத்தது. மரணம் சாதி, மதம் என்ற அடையாளம் தாண்டி அனைவரையும் காவு கொண்டது. மரணம், பொதுமையானதைப் போலத் தவ வாழ்வும் பொதுமையானது என்ற செய்தியை நமக்குச் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறது என்று நமக்குத் தோன்றுகிறது.

குடந்தையில் பள்ளிக்கூரை எரிந்த நிகழ்வு உலகம் தாங்க இயலாத துன்ப நிகழ்வு. பிஞ்சு மழலை மலர் மொட்டுகள் கருகின. கருகிய மழலை மலர்களின் வேர்களைச் (துயருற்ற பெற்றோர்களை) சந்தித்து ஆறுதல் கூறினோம். சர்வமத நல்லிணக்க பிரார்த்தனை நிகழ்த்தி அமைதியான சூழலை

வேண்டினோம். மழலை மலர்களின் நினைவாகக் கூரை இல்லாப் பள்ளிகள் உருவாக்குவோம் என்று பிரகடனம் செய்த வேளையில் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி, நமக்கு நாமே திட்டம் முதலியவற்றின் மூலம் வகுப்பறைகள், கட்டிடங்கள் உருவாக வழிவகைச் செய்யப்பட்டது.

1999 இல் ஒரு நள்ளிரவுப் பொழுதில் கார்விபத்தில் சிக்கிக் கொண்ட நாமும், நமது உதவியாளரும் மருத்துவமனையின் தீவிரச் சிகிச்சைப் பிரிவில் இருந்தோம். விபத்து நடந்த மறுநாள் அதிகாலைப் பொழுது, மருத்துவமனை வளாகத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. நிறைய இளைஞர்கள்! கூட்டத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் அந்நாளைய மதுரை மாவட்டத் தலைவர் தோழர் விக்கிரமன் உணர்ச்சி வயப்பட்டார். மருத்துவரிடம் உரையாடுகின்றார். "பொன்னம்பல அடிகளார் நாட்டின் கருவூலம். அவர் நாட்டிற்குத் தேவை. தேவைப்படும் இரத்தம் தருவதற்கு இளைஞர்கள் நாங்கள் தயாராய் வந்திருக்கின்றோம். எவ்வளவு இரத்தம் வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். மருத்துவர் அவர்களை அமைதிப்படுத்தி "உரிய மருத்துவச் சிகிச்சை நடைபெறுகின்றது. பொறுமையாய் இருங்கள்" என்று வேண்டிக் கொண்டிருந்தார். அரை மயக்க நிலையில் இருந்த நாம் அவர்களைப் பார்த்து நன்றியோடு கையெடுத்துக் கும்பிட்டோம். அமைதியானார்கள்.

நம் மனதில் நீண்ட நாளாய் ஒரு உறுத்தல். சொந்த உறவுகளாய் வந்த உறவுகள் இவ்வளவு பேர் நமக்கு இரத்தம் தருகின்றோம் என்று வந்தார்கள். அதை நினைக்கும் போதெல்லாம் கண்கள் குளமாகும். இந்த நிகழ்வு மனதில் ஏற்படுத்திய தாக்கம் ஓரிரு ஆண்டுகள் மகாசன்னிதானத்தின் குருபூசை நாளில் இரத்ததான முகாமிற்கு ஏற்பாடு செய்தோம். நாமே முதலில் இரத்தம் வழங்கி இரத்ததான முகாமைத் தொடங்கி வைத்தோம். நாம் இரத்தம் வழங்க ஆயத்தம் ஆனபோது, சிங்காரவடிவேல்

நம் தனிமருத்துவர் - அன்புக்குரிய மருத்துவர் ஆசீர்வாதம் அவர்களைத் தொடர்பு கொண்டு நாம் இரத்தம் வழங்கலாமா? என்று கேட்டுக் கொண்டிருந்தபொழுது, மருத்துவர் ஆசீர்வாதம் பேச விரும்புவதாக சிங்கார வடிவேல் தொலைபேசியை நம்மிடம் தந்தார்.

"தங்கள் உடல்நிலை கருதி இரத்தம் வழங்க வேண்டாம்" என்று தயங்கித் தயங்கி மருத்துவர் கூறினார். மருத்துவரிடம் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் அதே நேரத்தில் நாம் இரத்தம் வழங்கி விட்டோம். மருத்துவர் ஆசீர்வாதம் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவர். நம்மீது தனி அன்பு கொண்ட மருத்துவர். நமக்கு "இரத்தம் வழங்க வேண்டாம்" என்று ஆலோசனை கூறிய அன்றே அரசு பொது மருத்துவமனையின் ஒரு பிரிவின் தலைமை மருத்துவரான அவர், தானே இரத்த வங்கிக்குச் சென்று இரத்தம் வழங்கி விட்டார். தன் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளவருக்கு இயல்பாய் வழங்கிய மருத்துவ ஆலோசனையால், இரத்தம் வழங்க வேண்டாம் என்று நம்மை தடுத்து விட்டோம் என்ற உணர்வில், தானே இரத்தம் வழங்கிய மருத்துவர் ஆசீர்வாதம் இறைமை அளித்த அன்பின் ஆசிர்வாதம் தானே!

"அன்பே வாழ்வு" என்ற நூலுக்கு நமது முன்னுரை உடனடியாக வேண்டும் என்று ஆதீனப்புலவர் மரு. பரமகுரு அவர்கள் கூறினார்கள். ஒடிசா மாநிலத் தலைமைச் செயலாளர் அன்புக்குரிய இரா.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் நாம் தொலைபேசியில் கேட்டுக் கொண்ட ஓரிரு நாட்களில் "அன்பே வாழ்வு" நூலுக்கு அணிந்து வழங்கிவிட்டார்கள். ஒடிசா மாநிலத் தலைமைச் செயலாளர் இரா.பாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் கடுமையான பணி நெருக்கடிகளில், ஒடிசா மாநிலத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் நாம் அணிந்துரை கேட்ட அவகாசம் ஓரிரு நாட்கள் கூட இல்லை. நம்மீது கொண்ட அன்பின் மிகுதியோடு அன்பின் உரையாக அணிந்துரை

வழங்கினார்கள்.அவரது அன்பிற்கு மறுமொழி கூற வார்த்தைகள் இல்லை.

தம் உடல் நலிவுற்றபோதிலும் "அன்பே வாழ்வு" நூல் ஆதீனக் குருபூசை திருநாளில் வெளிவர வேண்டும் என்ற உறுதியோடு வைராக்கியத்தோடு தம் உடல்நலனைப் பொருட்படுத்தாமல் நமது கட்டுரைகளைத் தொகுத்தும் திருத்தியும் பொலிவுப்பெறச் செய்து நூலினை உருவாக்கும் பணியைத் திருப்பணியாய்ச் செய்து கொண்டிருந்தார் மக்கள் சிந்தனை ஆசிரியர் நம் ஆதீனப் புலவர் மரு. பரமகுரு.

ஒடிசா மாநிலக் கூடுதல் தலைமைச் செயலாளரிடமிருந்து இரா.பாலகிருஷ் ணன்,இ.ஆ.ப., அவர்களிடமிருந்து அணிந்துரை வந்துவிட்டது. புத்தகப் பணி முழுமையாய் நிறைவு பெற நமது முன்னுரைக்காக நூல் காத்துக் கொண்டிருக்கிறது. கால அவகாசம் இல்லை என்றும், மறுநாள் காலை அவசியம் நமது முன்னுரை வேண்டும் என்று நம்மிடம் கூறியிருந்தார்.

நூல் நம் முகவுரைக்காக மட்டும் காத்திருக்கிறது. அன்று இரவு எழுதிவிடலாம் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்றம்.

நாம் காரணம் சொல்லாமல் "எழுதித் தருகிறோம்" என்று மட்டும் சொன்னோம். எழுதிவிடலாம் என்று நினைத்த மாலைப் பொழுதில் நம் குன்றக்குடி தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவி உயரமான சுவரிலிருந்து கீழே விழுந்து தலையில் அடிபட்டு காரைக்குடி மருத்துவமனைக்குச் சென்று, பின் அங்கிருந்து மதுரை பொதுமருத்துவ மனையில் அவசரச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். நம்மால் நம் பணிகளில் கவனம் செலுத்த இயலாத நிலை. அவசர சிகிக்சைப் பிரிவில் அந்த மழலை அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை நடைபெற்றபோது நாம் மருத்துவர்களிடம் தொடர்ந்து தொடர்பு கொண்டு, குழந்தையின் உடல்நல முன்னேற்றத்தினைப் பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தோம். அந்த மழலை மலரின் நலனுக்காக பிரார்த்தனை செய்தோம். "அன்பே வாழ்வு" நூலுக்கு முகவுரை

எழுதவில்லை. மனமெல்லாம் அந்தக் குழந்தை நலம் பெற வேணும் என்பதிலேயே இருந்தது. இரண்டு நாட்கள் கடந்து விட்டது. கடவுள் அருளால் அற்புதம் நிகழ்ந்தது. தீவிரச் சிகிச்சைப் பிரிவில் இருந்த குழந்தை நலம் பெற்று வீடு திரும்பிய செய்தி கிடைத்தது. அந்தச் செய்தி கிடைத்த போது நாம் ஈரோட்டில் இருந்தோம். உடனே "அன்பே வாழ்வு" நூலுக்கு முகவுரை வேகமாக எழுதி முடிக்க முடிந்தது.

மனத்தின் சுமை குறைந்து அமைதி எழுந்த போது எழுத்தின் வேகம் மிகுந்து முகவுரை விரைந்து முடிக்கப்பட்டது. நூலுக்கு முகவுரை எழுதி முடித்துவிட்டு, மறுநாள் சுதந்திர தின கொடியேற்று விழாவிற்காக காலைப்பொழுதில் மேல்நிலைப் பள்ளி, கல்வியியல் கல்லூரி, தொடக்கப்பள்ளி, மருத்துவமனை போன்ற இடங்களுக்குப் போய்க் கொடியேற்றிவிட்டு ஐ.டி.ஐ. வளாகத்தில் கொடியேற்றிவிட்டு திரும்பியபோது ஒரு சின்னஞ்சிறிய மழலை மலர், காற்றில் கொடி அசைந்து வருவதைப் போல் நம் அருகில் வந்தது. நம் கையில் இனிப்பை வழங்கி விட்டு "சுதந்திர தின வாழ்த்துக்கள்" என்றது. நாமும் அந்தக் குழந்தைக்கு சுதந்திர தின வாழ்த்துத் தெரிவித்து விட்டு, மருத்துவ மனையில் இருந்து நலமாகி வந்த நமது தொடக்கப்பள்ளியில் 4 ஆம் வகுப்பு பயிலும் விஷ்ணுபிரியாவின் தந்தையிடம் (நமது ஐ.டி.ஐ.யில் ஆசிரியராகப் பணிபுரிபவர்) குழந்தையின் நலம் விசாரித்து விட்டு, நம் கரங்களைப் பற்றிக் கொண்டு புன்னகையோடு நன்றி கூறிய அந்த மழலை மலரான விஷ்ணுபிரியாவின் தலையில் கையை வைத்து "இறைவா! உன் பெருங்கருணையே கருணை" என்று இறைவனுக்கு நன்றி கூறினோம்.

இப்போது சொல்லுங்கள்! "அன்பே வாழ்வு" என்பது வார்த்தையாகுமா? வாழ்க்கையாகுமா?

அன்பே வாழ்க்கை ஆக இறையருள் துணைபுரிய வேண்டும்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இறைவா, என்னைப் பணிகொள்வாய்!

கடவுள் மறுப்புக் கொள்கை ஒன்றும் புதியதல்ல. பழைய கொள்கை. சமய நூல்களில் கடவுள் மறுப்புக் கொள்கை உலகாயதம் என்ற பெயரில் மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. கடவுளை மறுத்தல் எளிது. கடவுளை நம்புதல் கடினமான கொள்கை. கடவுளை நம்ப வேண்டும். நம்பிக்கையில் உறுதி வேண்டும். கடவுள் நெறியில் நடத்தலுக்குரிய திண்மை வேண்டும். இடர்ப்பாடுகளைக் கடந்தும் கடவுளை நம்புதல் வேண்டும். ஆதலால் கடவுளை நம்பும் கொள்கை. அக்கொள்கை வழி வாழ்தல் அருமைப்பாடுடைய முயற்சியின் பாற்பட்டது.

அதுபோலவே கடவுள் நெறியில் நின்று வாழ்தலே வழிபாடு. வாழிபாடு என்பது உயர் கொள்கை. வழிப்படுதல் என்ற சொல்லே வழிபாடு ஆயிற்று. இறைநிலை இயக்கம்; ஓயாத இயக்கம்; இடையீடின்றி இயங்கும் இயக்கம். இயக்க நிலையில் ஐந்தொழில்கள் நடக்கின்றன. படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள் நடத்தும் முதல்தரத் தொழிலாளி - உழைப்பாளி இறைவன். இறைநெறியில் நிற்போருக்குப் படைப்பாற்றல் வேண்டும். இறைவனிடம் உள்ள படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாவரங்களின் ஒளிச்சேர்க்கை போன்றதே இறைவனிடம் ஆன்மா நடத்தும் ஞானச்சேர்க்கை. இறைவன் தந்த உலகைக் காக்கவேண்டும். நாளும் தீமைகளுடன் போராடி நல்லவற்றை நிலைநிறுத்த வேண்டும். நன்றல்லாதவற்றை மறக்க வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அருளாக்கம் கண்டு வாழ்வித்து வாழ்தல் வேண்டும். இதுவே சமய வாழ்க்கை. கடவுள் எல்லாம் செய்வார் என்று வாளா கிடத்தல் இறைநெறி சார்ந்த வாழ்க்கையன்று.

கடவுளையும் கடவுளின் அருளையும் மறுத்து வாழ்தல் என்பது அறிவுடைமையன்று. கடவுள் இல்லை என்பது எளிதான விவாதம். ஆனால், இந்தப் பரந்த உலகியலில் ஓர் ஒழுங்கு (Order) இருக்கிறது. முறை பிறழாத நிகழ்ச்சிகள் (Consistency) இருக்கின்றன. இவை எப்படி?

எதனால்? நியதி என்று சமய நூல் கூறும். இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்ற வரையறை ஏதும் கடவுளுக்கு இல்லை. திருவள்ளுவர், "வாலறிவன்" என்றார். "மூரி முழங்கொலி நீர்" என்றும் "வாசமலர்" என்றும் திருமுறை கூறும். ஆதலால், சமயவாதிகள் பலபடக் கூறும் கடவுள் உருவமும், தன்மைகளும் பற்றி அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை! கடவுள் உயர்வற உயர்ந்த பேரறிவு! பேராற்றல்! வரம்பில் இன்பம்!

மாணிக்கவாசகரும் தொடக்க காலத்தில் கடவுளின் அருளை மறுத்து வாழ்ந்திருப்பார் போலும்! "மறுத்தனன் யான் உன் அருளை" என்று கூறுகின்றார். அங்ஙனம் மறுத்தது அறியாமையின் விளைவு என்று ஒத்துக் கொள்கின்றார். அறியாமை என்பது தெரியாமையன்று. முறை பிறழ உணர்தல் அறியாமை. மறுத்து வாழ இயலாத கடவுள் அருளை, மறுத்து வாழலாம் என்பது முறை பிறழ்ந்த செயல்தானே! இறைவா! யானுன் அருளை மறுத்ததால் வெறுத்து ஒதுக்கிடாதே! மணி, அதன் மதிப்பினை உணர்ந்தார்க்கும் உணராதருக்கும் ஒளி தரும். நீ, மணி, மணிகளுக்கெல்லாம் சிறந்த மணி. ஆதலால் என்னை வெறுத்து ஒதுக்காதே! நான் உன்னை வெறுத்ததற்குக் காரணம் நான் அல்ல. என்னுடைய வினைத் தொகுதி ஆட்டி வைத்தது. ஆதலால் என்னை ஒதுக்காமல் என் வினைத் தொகுதியை ஒறுத்திடு. எனக்குக் கேடு செய்யும் வினைகளிலிருந்து என்னை மீட்டு எடு! ஆண்டுகொள்! இறைவா, நான் சிறியவன்! வினைத் தொகுதி வசப்பட்டவன். ஐவரொடு போராடி வெற்றிபெற முடியாமல் தவிப்பவன். நீயோ, பெரியோன்! பிறவா யாக்கைப் பெரியோன்! நீ என் வினைகளைப் பொறுத்தாட் கொள்ளுதல் கடமை! நானாக ஒன்றும் செய்யவில்லை! என் வினைகள் என்னைப் பொய் நெறியில் இழுத்துச் சென்றன! ஆனாலும் நான் நாய்! சிறு நாய்! நீ ஆட்கொண்டருளினால் உன்னை நினைந்தே வாழ்வேன்! மறவேன்! பெரியோனாகிய நீ என் பிழை பொறுத்து என் வினைத் தொகுதியை ஒறுத்து என்னை மீட்டு எடுத்து ஆண்டுகொள்! என்று உருகுகிறார் மாணிக்கவாசகர்.

இறைவா, முன்பே ஒருதரம் ஆட்கொண்டாய்! குருந்த மரத்தடியில் ஆட்கொண்டருளினை! அப்போது நான் என் உயிரையே உனக்கு அர்ப்பணிப்புச் செய்தேன்! உரிமைப்படுத்தினேன்! என்னுடைய உடலையும் உனக்கே உரிமைப்படுத்தி உன்னுடைய அடிமையானேன்! அடிமைக்கு உடைமைகள் ஏது? ஏன்? எதற்கு? ஆதலால் என்னுடைய உடைமைகளையும் உன்னிடமே ஒப்படைத்தேன்! நீ அவற்றையெல்லாம்

ஆட்கொண்டபோது கொள்ளவில்லையோ? நீயே என் தலைவன்! நீயே என் ஆண்டான்! நான் அடிமை! இன்று எனக்கு ஓர் இடையூறு உண்டா? இடையூறு வரலாமா? ஆனால், இடையூறு வந்திருக்கிறது; வந்து கொண்டிருக்கிறது. தமக்கு அன்பு பட்டவர் பாரம் சுமப்பதற்கென்றே எட்டுத் தோள்களை - வலிமை மிக்க தோள்களைக் கொண்ட பெருமானே! உனக்கு என்னுடைய அல்லல்கள் தெரியவில்லையா? தெரிந்தும் பாராமுகமாக இருக்கிறாயே! என்று நெக்குருகப் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

அன்றே எனன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ?
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே! (குழைத்துபத்து-7)

இறைவா, நாட்டவர் சொல்லக் கேள்வி! அழுக்கொடு சேர்ந்தால் நிலம் அழுக்காகும். அழுக்கொடு சேர்ந்தால் தண்ணீர் அழுக்காகும். ஆனால், நெருப்பு! அழுக்கொடு சேர்ந்தால் நெருப்பு அழுக்காகாது. அது மட்டுமல்ல, அழுக்கும் தூய்மையாகும் என்பர். திருப்பெருந்துறைப் பெருமானே! உனது கண்களில் ஒன்று அக்கினி; தீ! ஏன் என் ஆணவத்தைச் சுட்டுப் பொசுக்கக்கூடாது? என்னுடைய வினை வளத்தை நீறாக்கக்கூடாது! முழு நீறு சண்ணித்த திருமேனியை உடைய சிவனே! உயிர்கள் செய்த வினைகள் நீறாவதற்காக நீறணிந்து நிற்கின்றாய்! வினைகள் நீங்கி நிற்கின்றாய்! விளங்கும் முதல்வனாகி நின்றருள் செய்கின்றாய்! ஊழி முதல்வ! ஒருவ! நீ, நன்றே செய்வாய் என்று நம்பி ஆட்பட்டேன் இறைவா, நீ நன்றுடையாய்! எத்தகைய நன்று? தீமையே கலப்பில்லாத நன்று! திருவருள் நன்று! ஆனால், நீ செய்த நன்றை நன்றெனக் கருதாமல் பிழையென எண்ணினேன்! உன்னுடைய அருளிப்பாட்டில் பிழையே இருக்காது. பிழை இருக்க வழியே இல்லை! ஆயின் என்னுடைய அறியாமையால் பிழையென்று கருதினேன்! நின்னருளைத் துணிந்து மறுத்தேன்.

"சிவாயநம" என்று சொல்லும் பேற்றினை அருளிச் செய்தனை! அன்றே எனது அல்லல்கள் அகன்றன என்று எண்ணியிருந்தேன். ஆனால் அல்லல்கள் அகன்றபாடில்லை. மீண்டும் மலவாசனை தாக்குகிறது. பாசி படர்ந்த குளத்தில் பாசி அகன்றும் முழுதும் அகலாமல் உடன் படர்தல் போல என்னை ஆணவம் அடர்த்துகிறது. நெய்க்குடத்தைச் சுற்றிலும் எறும்புகள் மொய்ப்பதைப்போல வினைகள் என்னை மொய்க்கின்றன. அவா, வெள்ளம்போல் வந்து தாக்குகிறது! இறைவா, இதற்கெல்லாம் என்ன காரணம்? ஆட்கொண்டருளிய நீ, துன்பத்திற்குக் காரணமாகிய உடலை அகற்றாமல் வைத்து வாழவைத்து விட்டாய்! உடல் உள்ள அளவும் மலவாசனை இருக்கத்தானே செய்யும்! வினைகளும் நீங்கா இறைவா! என்னை ஆட்கொண்டருளிய நீ என் உடலை நீக்காதது ஏன்?

இறைவா, இன்று என் பிழைகளை எண்ணி வெட்கப்படுகின்றேன்; வருத்தமுறுகின்றேன்; ஆட்கொண்டருளிய உன்னையும் பிரிந்துவிட்டேன்! திருப்பெருந்துறை சிவனே! நான் பொய்ம்மையுடையேன். ஆயினும் பெரியோனாகிய நீ கருணையினால் என் உடல் புகுந்து இடம் பிடித்து ஆட்கொண்டருளினை! ஆயினும் நின் கருணைப் பெருவெள்ளத்தை நினைந்து நினைந்து அழுகின்றேனில்லை. இரும்பின் பாவையனைய நான் ஆண்டருளிய நின்னைப் பிரிந்தேன்! அல்லல்களுக்கு ஆளானேன்! ஆயினும் செத்துப்போனேன் இல்லை! மண்ணில் வாழ்கின்றேன்! விழித்துக் கொண்டிருப்பதாக எண்ணினேன்! பாவித்தேன்! என் உள்ளக் கருத்தை மனத்துள் நின்ற கருத்தை இழந்தேன்! விழித்திருந்தும் இறந்த மூடர்களை இந்த உலகில் கண்டதுண்டா? என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நிற்கின்றேன்! இறைவா! இனியும் பொறுக்க இயலாது! விடைப்பாகா! உழுத பயனை ஊரவர் உண்டு மகிழ, வைக்கோலைத் தின்று உயிர் வாழும் கிடையை வாகனமாக உடையவனே! உன்னைப் பிரிந்து வாழும் இனி இருக்க ஒருப்படேன்! அதனால், இறக்கவும் மாட்டேன்.

இறக்காமையால் தானே மீண்டும் மீண்டும் அல்லல்! இறைவா, உடலை நீங்காது வாழ்ந்திடத் திருவுள்ளம் பற்றினை! அப்புறம் ஏன் துன்பங்களைத் தந்து ஒறுத்திடுகின்றாய்! இறைவா நீ, என் உடலை ஒறுத்திடுதல் நன்றோ! நான் உய்வதற்கு என்னை ஒறுத்திடுதல் மட்டும் போதுமா? ஒறுத்தலினால் விளைவது துன்பமே! ஆதலால் இறைவா!

என்னை ஒறுத்தது போதும்! இனிமேலும் ஒறுத்து வருத்தந்தர வேண்டாம்! என்னைப் பணிகொள்! உடல் பணிகளில் ஈடுபட்டால் வினை நீங்கும். துன்பங்கள் தொடரா! இறைவா, நீ எனக்கு உடல் தந்தருளியதே, பணி செய்யத்தானே! கண்கள் இயல்பாகப் பிறரையே பார்க்க உதவுகின்றன. இதன் அமைப்பு விதி என்ன? பிறர் நலம் காண முயலுக, பிறரொடு உறவு கொள்க என்பதுதானே! உடற்பொறிகள் அனைத்தின் அமைப்பும் பிறர் நலம் கருதியதாகத்தான் அமைந்துள்ளன. ஆதலால், என்னைப் பணிகொள்! பணி செய்தால் பொறி புலன்கள் அன்பில் தோயும்! எல்லோரிடமும் பணிந்து பணி செய்வதால் தாழ்வெனும் தகைமை வந்து பொருந்துகிறது.

ஆன்மாக்களின் உய்தியையே குறிக்கோளாகக் கொண்ட தலைவனே! தனக்குவமை இல்லாத தலைவனே! நான் என்ன செய்வேன்? இறைவா, நீயே பணித்தருள்! “இது செய்க!” என்று பணித்தருள்! உன் விருப்பமே என் விருப்பம்! பணித்த வண்ணம் செய்வேன். காலந்தாழ்த்தாது அருள் செய்க! காலம் தாழ்த்திடின் செத்துப் போவேன்! நான் செத்துப்போனால் எல்லோரும் சிரிப்பர்! வேண்டாம் ஐயனே அருள் செய்க!

இறைவா அனுபவித்த அல்லல்கள் போதும்! இனிமேலும் அல்லல்களைத் தராதே! ஒறுத்திடாதே! பணிகொண்டு அருள்செய்! ஒரோவழி நான் பணி செய்ய மறுத்தால் என்னைப் பலரறியக் கூவியழைத்துப் பணிகொள்! பலரறியப் பணிகொள்! பணி செய்தலே வினை நீக்கத்திற்கு வழி! இறைவா,திருப்பெருந்துறை இறைவா அருள்செய்! என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். அத்திருப்பாடல் இது.

அடியேன் அல்லல் எல்லாமுன்
  அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறா!எம்
  கோவே! ஆ, வா என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாதது
  எத்துக்கு எங்கள் சிவலோகா?
உடையாய் கூவிப் பணி கொள்ளாது
  ஒறுத்தால் ஒன்றும் போதுமே! (குழைத்துப்பத்து - 7)

பாவமும் பழியும்

யாருக்கு யார் போக்குவார்?

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

இந்த வினாவிற்குப் பலரும் பலவிதமாக விடை கூறுவர். திருஞானசம்பந்தர் திருவாஞ்சியத் தலைத்துப் பயணத்தில், அடியார் பலரும் வரவேற்றபோது, மெய்யடியார் ஒருவர் இந்த வினாவை எழுப்பினார். அதற்குத் திருஞானசம்பந்தர் அருளிய விடை ஒரு பாடல் மூலமாக வெளிப்பட்டது. அப்பாடல் இது :

மேவில் ஒன்றர் விரிவுற்ற
இரண்டினர் மூன்றுமாய்
நாவில்நாலர் உடலஞ்சினர்
ஆறர் ஏழோசையர்
தேவில்எட்டர் திருவாஞ்சிய
மேவிய செல்வனார்
பாவந்தீர்ப்பர் பழிபோக்குவர்
தம்மடியார்கட்கே

பாவம் பழி என்றால் என்ன? :

"பாவம் - என்பது தீவினை : பழி - என்பது தீச்சொல் : இவ்விரண்டும் முறையே செயலும் மொழியுமாய்த்தன் திரி கரணத்தாலும், பிறர் வாயாலும் நிகழ்வன. அடியர்கட்கே பாவந்தீர்ப்பர்; பழிபோக்குவர். எனவே அல்லார்க்கு இல்லை என்பது விளங்கும்" - என்பது தருமையாதீன உரைக்கொடையாகும்.

சிவபெருமான், அடியவர்கட்கு வரும் பாவங்களையும், பழியையும் போக்குபவர் என்பது இதனால் தெரியவரும். தருமையாதீன உரைக்குறிப்பு மூலம் அடியவரல்லாதவர்க்கு இரண்டும் தீர்க்கமுடியாதன என்பது முடிந்த முடிவு. எடுத்துக்காட்டுகள் காப்பியங்கள் தெரிவிக்கும்.

எண்ணலங்கார உட்பொருள் :

தருமையாதீன உரைக்குறிப்பு இல்லையேல், இப்பாடலில்

அமைந்த ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்ணுப்பெயரின் பொருள் உணரமுடியாது. நன்றி உணர்வோடு இப்பாடலின் பொருளை வரிசையாகக் காண்போம்.

I. மேவில் ஒன்றர் :

விரும்பி வழிபட்டால் அந்நியமாதலை உடையவர். சைவ உபநிடதங்களிலும், "சைவ ஆகமங்களிலும் அந்நியமின்றி நின்றுணரும் அநுபவ மாத்திரையிற்கோசரிப்பது என்று ஓதப்படும் சிவனருளாம், மெய்ப்பொருள்" என்னும் சிவஞானபாடிய வசனமும் ஈண்டுணரத்தக்கன, என்ற உரைக்குறிப்பில், ஒன்றர் - ஒருபொருளயிருப்பவர் எனலுமாம் என முடிப்பர்.

II. விரைவுற்ற இரண்டினர் :

I. விரிவடைந்த ஞானமும் கிரியையும் உடையவர்.
II. சிவமும் சத்தியுமானவர் எனலுமாம்.
III. இரண்டு, சொரூபம் தடத்தம் எனலுமாம்.
IV. இரண்டு போகமும் முத்தியும் ஆதலும் பொருந்தும்.

என்பன இரண்டிற்குரிய உரைக்குறிப்புகள்.

III. மூன்றுமாய் :

I. "இச்சை ஞானம் கிரியை என்று மூன்றுமாகி" என்பது சித்தியார் கூற்று.
II. இலயம், போகம், அதிகாரமாய் என்றும்
III. ஒன்றாய் வேறாய் உடனாய் என்றும்
IV. மூன்று தீயுமாய், முச்சுடருமாய் என்றும் உரைக்குறிப்பு காணப்படுகிறது.

IV. நாவில் நாலர் :

I. "மூன்றுமாய் நாவின்நாலர்" என்று கொண்டு பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருளையும் ஆய்ந்துணர்த்தும் "நான்மறை நாவர்"
II. நாவால் உரைக்கப்படும், அறம்பொருள், இன்பம் வீடாக இருப்பவர் என்றும் பொருள் கொள்ளலாம்.
"செந்தமிழ்க் குமரகுருபர முனிவர்"

"அந்நலம் விழைந்தவர்க்கறமுமாயினை
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை
இன்னலம் விழைந்தவர்க்கின்பு பொருளுமாயினை
மெய்ந்நலம் விழைந்தவர் வீடுமாயினை" என்ற

திருவாக்கு இவற்றை உணர்த்தும் என்பது அடியேன் கருத்து.

V. உடல் அஞ்சினார்

I. பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் ஐவகைச் சத்தியாகிய திருமேனியை உடையவர்.

II. பஞ்சப்பிரம மந்திரதேகமும் ஆம்.

III. அருவம் இரண்டு, அருவுருவம் ஒன்று, உருவம் இரண்டு ஆகிய ஐந்து உடலும் சொரூபம் அல்லவாயினும் உபசாரத் திருமேனியாகும் என்பன உரைக்குறிப்பாகும்.

IV. ஆறர் : அறுகுணத்தர். (ஷாட்குண்யர்) முற்றறிவு முதலியவை. பகவர் எனலுமாம். உடலஞ்சினர் ஆறர் என்று ஒரு தொடராக்கி, பிறவியை அஞ்சின நல்லோர் வழியில் விளங்குபவர். உடலஞ்சு – என்பதற்குப் "பஞ்சலோகம்" என்றும், ஆறர் – கங்கையாற்றினர் என்றும் பொருள் கொள்ளலாம்.

V. ஏழ்ஓசையர் : ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவர்.

VI. தேவில் எட்டர் : தெய்வத்தன்மையில் அட்டமூர்த்தியாய் இருப்பவர். எண்குணத்தர் எனின் "ஆறர்" என்பதற்கு "ஷாட்குண்யர்" என்னாது வேறு பொருள்கொள்க.

இத்தகையவராகிய திருவாஞ்சியப் பெருமான், தம் அடியவர்களின் பாவங்களைத் தீர்ப்பர்; அப்பெருமான் தம் அடியவர்கட்கு வரும் பழியைப் போக்குவார் – என்று பொழிப்புரை கூறினாலும், தருமையாதீனக் குறிப்புரை இறைவன் "அடியார்கட்கே" பாவந்தீர்ப்பர்; பழி போக்குவர் என்றும், அல்லார்க்கு இல்லை என்பதாம் என்று எதிர்மறை முகத்தாலும் கூறியிருப்பது சிந்திக்கத்தக்க அரிய உரையாகும். உரைவரையச் செய்த குருவருள் திறத்தை வணங்கி "நன்றி" பாராட்டுவதுதான் நங்கடமையாகும்.

ஒருபோதும் ஒருபொழுதை வீணாக்காமல்...

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல

இதில் ஒன்றுக்குக் கீழே, கோடியைவைக்கிற வள்ளுவர், அதனிலும் பல அவரவர்தம் மனப்போக்கிற்கு ஏற்ப மடங்காக்கிக் கொள்ள விட்டுவிடுகிறார்.

அது என்ன ஒரு பொழுது?

பல பொழுதுகளின் சேர்மானத்தில் அடையாளமாகிறது காலம். இடத்தையும், காலத்தையும் இருகால்களாய்க் கொண்டு உடம்பொடு இணைந்த உயிர் நடக்கிறதே அந்த இயக்கம் வாழ்க்கை.

வாழ்க்கை வாழ்தலுக்கு உரியது. மனித வாழ்க்கையோ வாழ்வாங்கு வாழ்தலுக்குரியது. வாழ்தலுக்கும், வாழ்வாங்கு வாழ்தலுக்கும் வேறுபாடு இருக்கிறது. தன்போக்கில் நிகழும் காலத்துக்குத் தகுந்தபடி ஒழுகுதல் வாழ்க்கை. இது இயல்பானது; சரியானதும்கூட. இதனினும் மேம்பட்ட சிறப்புக்குரியது வாழ்வாங்கு வாழ்தல்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்கிறார் வள்ளுவர். தன் பயன் கருதி வாழ்வதைவிடவும் மண் பயனுற வாழ்தல்தான் வாழ்வாங்கு வாழ்தல். வானத்தையும் வையத்தையும் இணைத்துப் பார்க்க எழும் விசுவரூப வாழ்க்கை அது.

எவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல, எவ்வாறு வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம்.

மனிதர்கள் எல்லோருக்கும் தத்தம் புகழை நிறுவுகிற வாய்ப்பு இயல்பாகவே வாய்க்கும் என்று சொல்லிவிட முடியாது. அவ்வாறு கிடைக்காவிடினும் தாமே முயற்சிசெய்து செயற்கரியதும் உரியதுமான சிறந்த செயல்களைச் செய்வதன் வாயிலாக, நிறுவிக் கொள்ள முடியும் என்பதைக் குறிப்பாகச் சொல்லிவிடுகிறார். அவ்வாறு வாழ்வாங்கு

வாழ்ந்தவர்களின் வாழ்க்கை, அற்பக் காலமே ஆனாலும், அதற்குள் பல ஆயிரமாண்டுகள் வாழ்விக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கும்.

பதினாறு ஆண்டுகள் மட்டுமே பயனுற மண்மேல் வாழ்ந்த மானுடர், சீர்காழிச் செல்வர் திருஞானசம்பந்தர் அவர் பாடிய அருட்பாடலில் ஒன்று "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று அமைவது. அந்தத் தொடரோடு அவர் தன் பாடலை முடித்துவிடவில்லை.

"வைகலும்" என்று அடுத்தொரு சொல்லை வைக்கிறார். நாளும் எனப் பொருள் தரும் அச்சொல்லை, நாள்தோறும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

கற்பகோடிக் காலம் இங்கேயே இருந்துவிடப் போவதாய் நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கும், அற்ப காலத்துக்குள்ளேயே ஆயுள் முடிந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருப்பவர்களுக்கும் இடையில் நுட்பமாய் நகைத்து, ஒரு உம் போடுகிறாரே வள்ளுவர்,ஒரு பொழுதும் என்று.

இந்த ஒருபொழுது, வெறும்பொழுது அன்று. பெரும்பொழுது. உயிர் காக்கும் மருந்தெடுத்துக்கொண்டு நோயாளியைக் காக்க ஓடும் ஒருபொழுது, வாழ்வின் இணையைத் தீர்மானிக்க முயலும் ஒருபொழுது. பல்வேறு திசைகளாய்ப் பிரியும் எதிர்காலப் பாதைகளில் எந்த ஒன்றைத் தெரிவு செய்வது என முடிவெடுக்கும் ஒருபொழுது, நெடுநாள் புகழை, மதிப்பை, பெருமையைச் சலனத்தினாலோ சபலத்தினாலோ தடுமாறிவிடப் போகுமுன் அறத்துணையாகத் தடுத்து நிறுத்தப்படும் ஒருபொழுது. காலம் கருதி இந்த வரிசையில் இதையும் சேர்க்கலாம் - வாக்களிக்கும் எந்திரத்தின் முன் நிற்கும் ஒருபொழுது - இப்படி ஒவ்வொரு பொழுதிலும் பயனுற வாழவேண்டிய பக்குவத்தை உணர்த்திக் காட்டுகிற, இந்தத் திருக்குறளையும் எதுவோ, ஒருபொழுதில்தான் வள்ளுவர் எழுதவும் செய்திருப்பார். அது எந்தப் பொழுதென்ற ஐயம் வருகிறதா?

மீளவும் ஒருமுறை தொடக்கத்தில் இருந்து படிக்கலாம் இந்தக் கட்டுரையை. வேண்டியதில்லை... விளங்குகிறது? என்றால், ஒரு போதும் ஒருபொழுதை வீணாக்காமல் வாழ்கிறவர் நீங்கள் என்று உறுதி கொள்ளலாம்.

– பேராசிரியர் 'கிருங்கை' அவர்களின் கட்டுரையிலிருந்து...

தினமணி மார்ச் 12, 2016

அனுப்பியவர் : நெல்லை. ஆ. சுப்பிரமணியன்,

இசை இயக்குநர், திருச்சிராப்பள்ளி

அப்பர் காட்டும் வாழ்வியல் நெறி

(டி.ஆர்.குருமூர்த்தி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

இந்த உலகத்திலே வாழும் முறை அறிந்து வாழ்பவர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள் எனத் திருவள்ளுவர் நமக்கு உரைக்கின்றார். வாழும் முறை என்பது என்ன? வாழ்வின் இலக்கணம் என்ன? வாழும் முறையால் மனிதன் தெய்வநிலைக்கு உயர்கிறான் என்றால், வாழும் முறை எவ்வளவு உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது நமக்குப் புரிகின்றது. ஒவ்வொரு மனிதனும் வாழ்வாங்கு வாழ வேண்டும். அதற்குரிய தனிமனித வாழ்விலக்கணங்களை உணர வேண்டும். தனிமனிதன் மனிதகுலம் போற்றும் நல்லோனாக இருக்க வேண்டும். எந்த நிலையிலும் தன்னுடைய உயர்நிலையிலிருந்து தடம் பிறழுதல் கூடாது. கீழ்க்கண்ட நாலடியார்பாடல், நல்லோரின் குணத்தை உணர்த்தும்.

வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்; ஆங்கே
இனந்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது

வேப்பமரத்து இலைகளுக்கிடையே வாழைக்காய்கள் வைக்கப்பட்டு புகைமூட்டி கனியாக்கப்படுகின்றன. இச்சூழ்நிலையிலும், வாழைக்கனியில், வேப்ப இலைகளின் கசப்பு சேர்வதில்லை. கசப்பில் நின்றாலும் இனிப்பில் குறைவில்லை. இதுபோலவே, நல்லோர்கள் எவ்வகையான மக்களிடையே சேர்ந்தாலும், தனது தனித்தன்மையினை விட்டு விலகாது நல்லோர்களாகவே இருப்பர். இவ்விதம் வாழ்வதற்கான வழிமுறைகளை, வாழ்வுநெறிகளை “அப்பர்” என்று நேசமாக அழைக்கப்பெறும் திருநாவுக்கரசர் அருளியுள்ளதை இக்கட்டுரையில் காண்போம்.

விளைநிலத்திலே களைகள் பெருகினால் விவசாய விளைச்சல் குறைந்துவிடும். நிலத்திற்குப் பொருத்தமற்ற பயிரைப் பயிரிட்டால் விளைச்சல் குறைந்துவிடும். நீர்ப்பாசனம் இல்லையெனில் விளைச்சல் இல்லை. வேலி இல்லையெனில் உழவே இல்லை. மனித வாழ்வும், உழவு போலவே அமைந்துள்ளதென அப்பர் சுவாமிகள் தெரிவிக்கின்றார்.

மெய்ம்மையாம் உழுவைச்செய்து விருப்பமெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே.

மனிதன தனது வாழ்வில் "பொய்" என்னும் களையினை நீக்க வேண்டும். "உண்மை" என்னும் நெறியினைப் போற்றிப் பெருக்க வேண்டும். வயலின் வாழ்வும், பயிரின் வாழ்வும் நீரைப் பொறுத்து அமையும். மனிதகுலத்தின் வாழ்வும், மனிதனது வையத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையும் மனிதன் கடைப்பிடிக்கும் பொறுமையைப் பொறுத்து அமையும். மனிதன் தனக்குத்தானே வேலி அமைத்துக் கொண்டு, தனது தவறுகளை முழுமையாகக் குறைத்துக்கொள்ள வேண்டும். தனது தரத்தினையும் தகுதியினையும் தெரிந்துகொண்டு அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அகலக்கால் கூடாது. அதே வேளையில் அடியெடுத்து வைக்காமலும் இருந்துவிடக்கூடாது. உண்மையைக் கடைபிடித்தல், பொய்களைக் களைதல், தரத்தினையும், தகுதியினையும் உணர்தல், எக்கணமும் பொறுமையைப் போற்றுதல், தவறுகள் நிகழாதிருக்கத் தானே வேலி அமைத்துக் கொள்ளல் ஆகிய மேன்மையான குணங்கள் ஒரு மனிதனுக்கு வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிகளைக் கற்றுக் கொடுத்து சிவகதியினைப் பெற்றுத்தரும் என அப்பர் சுவாமிகள் விளக்குகின்றார். இக்கருத்தினையே இராமலிங்க அடிகளாரும் தனது திருவருட்பாவிலே "பொய்யாதே மெய்களையே புகன்றிடுதல் வேண்டும். புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்" எனத் தெரிவிக்கின்றார்.

கடவுள் நம்பிக்கை, எங்கும் ஈசன் என்கிற உணர்வு, ஈசனை உள்ளத்திலே வைத்து வணங்குதல் ஆகிய இறையுணர்வு நெறிகள் வாழ்விலே உயர்வான நிலைக்கு மனிதனை உயர்த்தும். இத்தகு அகநெறிகளை விலக்கிவிட்டு, எத்தகு புறநெறிகளைக் கடைபிடித்தாலும், மனிதவாழ்வு உயர்வதற்கு வழி இல்லை. இதனை அப்பர் கீழ்க்காணும் தேவாரப் பாடல்களில் விளக்குகின்றார்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே!
வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே.

எங்கும் இறைவன் என்று எண்ணிச் செயல்படுவதே உயர்வான வாழ்வு நெறியாகும். இந்த வாழ்வு நெறியினை நெஞ்சிலே கொள்ளாது, கங்கை, காவிரி, குமரித்துறை, அக்னி தீர்த்தங்கள் போன்ற எண்ணற்ற புனிதநீர் ஆடினாலும், பயன் விளையாது. எங்கும் ஈசன் என்கிற வாழ்வு நெறி, இறையருள் பெற உதவும். வையத்துள் வாழ்வாங்கு வாழவும் உறுதுணையாக இருக்கும்.

உள்ளத்தைக் கோவிலாக்கி, இறைவனைக் குடிவைத்து வழிபாடு செய்தலும் உயர்ந்ததொரு வாழ்வு நெறியாகும். இறைவனைத் தமது உள்ளத்திலே கொண்டு வழிபடாது வேதம் ஓதுவதாலும், வேள்விகள் செய்வதாலும், நீதிநூல்கள் படிப்பதாலும், பயிற்றுவிப்பதாலும், படித்து ஆறங்கம் உணர்வதாலும், வாழ்வில் எவ்விதப் பயனும் ஏற்படாது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திடவும் இயலாது. எங்கும் ஈசன் என நினைத்தலும், உள்ளமெனும் கோயிலிலே ஈசனை இருத்தி கசிந்துருகுவதுமே உயர்வான வாழ்வு நெறியாக அப்பர் விளக்குகின்றார்.

நமசிவாய என்கிற ஐந்தெழுத்து மந்திரம், மனித வாழ்விற்குரிய நன்னெறி காட்டும் என்பதனைக் கீழ்க்காணும் பாடல்களில் அப்பர் விளக்குகின்றார்.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே

தாமரை பொங்கி விரிந்து மலர்கிறது. இதனால் நாம் அனைவரும் தாமரையை விரும்பி ஏற்று வழிபாட்டிற்குப் பயன்படுத்துகிறோம். தாமரை மலரிலே கலைமகள் இருப்பதாக உணர்கிறோம். தாமரையின் குணம் அதனை உயர்த்துகிறது. மற்றவர்கள் வணங்க வையத்துள் வாழ்வாங்கு. வாழ்கிறது. பஞ்சகவ்யம் தருவது பசுவின் குணம். இதுவே பசுவின் சிறப்பு. பஞ்சகவ்யம் சிவனுக்கு அபிசேகப் பொருளாக இருக்கின்றது. பசுவிலே இலக்குமி வாழ்வதாக உணர்கிறோம். பசு தெய்வமாக வாழ்கிறது. மற்றவர்க்கு உதவி செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்கிறது.

கொடுங்கோல் மறந்து செங்கோல் ஏந்தி நல்லாட்சி செய்யும் அரசன், தனது தேசத்து மக்களுக்குக் கடவுளாக இருக்கிறான். நல்லாட்சி அரசனின் குணம், தனது தேசத்து மக்களுக்குக் கடவுளாக இருக்கிறான். நல்லாட்சி அரசனின் குணம். மற்றவர்கள் நல்வாழ்விற்காகத் தாம் வாழ்வது வையத்துள் வாழ்வாங்கு வாழ உதவும். மனித நாக்கிற்குச் சிறப்பு நமசிவாய என்ற ஐந்தெழுத்து; பஞ்சாட்சரம் உச்சரிப்பது என அப்பர் வலியுறுத்துகிறார். சமுதாயம் நோக்கும் உயர்வான வாழ்விற்கு ஐந்தெழுத்து மந்திரம் அடிப்படையாகும் எனச் சொல்லப்படுகின்றது. ஏனெனில், ஐந்தெழுத்து மந்திரம் மனிதனுக்குக் கல்வியும், ஞானமுமாக இருக்கிறது. மனிதனுக்கு நன்னெறி காட்டுகிறது. இது நான் அறிந்த வித்தை. இதனால் எனது நாக்கு நமசிவாய என்று தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருக்கின்றது என அப்பர் பெருமான் தமது தேவாரப் பாடல்களிலே தெரிவித்துள்ளார். அப்பர் ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமையை உணர்ந்தவர். அதன்படி வாழ்ந்து காட்டியவர். அவர் காட்டிய வாழ்வுநெறி மனிதகுல மேம்பாட்டிற்கு மாமருந்தாகும். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்கிற அப்பரின் மனிதநேயப் பார்வை மனிதர்களைச் சமுதாயச் சிற்பிகளாக உயர்த்தும்.

அகத்திலே ஒன்று புறத்திலே வேறு என்கிற நிலை இல்லாது இருத்தல் வேண்டும். அகமொன்றும் புறமொன்றும் கொண்டு ஈசனைத் துதித்தால் ஈசனே துதிப்போரை. எண்ணி நகுவார் என அப்பர் தெரிவிக்கின்றார். நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைப்பவர் நெஞ்சிலே ஈசன் குடிகொள்வார். இதனை இராமலிங்க அடிகளாரும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே எனத் துதிப்பின் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் எனத் தெரிவிக்கின்றார். உள்ளத்திலே பொய்களை நிரப்பி, கைகளிலே பூக்களையும் புனித நீரையும் கொண்டு இறைவனைத் தொழுதல் பயன் தராது. மனித வாழ்வும் சிறக்காது. இதனைக் கீழ்க்காணும் பாடல் விளக்குகிறது.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

மனிதன் செய்யும் தவறுகளைக் கீழ்க்காணும் வரிகளில் அபபர் கட்டிக்காட்டுகின்றார். அவற்றை முறையாகத் திருத்திக் கொண்டால்

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிகளை நாம் கடைப்பிடித்து அதன்படி வாழ்ந்து காட்டலாம்.

> *"வென்றிலேன் புலன்களைந்தும் வென்றவர் வளாகந் தன்னுள்*
> *சென்றிலே னாதலாலே செந்நெறி யதற்குஞ் சேயேன்"*
> *"கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்களோடும்*
> *உற்றிலே னாதலாலே யுணர்வுக்குஞ் சேயனானேன்"*
> *"பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பிறர்தமைப் புறமே பேசக்*
> *கூச்சிலே னாதலாலே கொடுமையை விடுமா றோரேன்"*
> *"வினைவழி விலாமையாலே வேதனைக் குழியிலாழ்ந்து*
> *களைகணு மில்லேனெந்தாய் காமரங் கற்றுமில்லேன்"*

ஐம்புலன்களின் தன்மைகளை அறிந்து அவற்றை வெல்வதற்கு முயற்சி செய்து புலன்களை வெற்றிகொள்ள வேண்டும். புலனடக்கமே மானுட நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ உதவுவது புலனடக்க நெறி. புலன்களை வெல்ல நினைப்போர், புலன்களை வென்றவரோடு சேர வேண்டும்; பழக வேண்டும். அவரின் வளாகத்திலே கூடி இருக்க வேண்டும். அந்நிலையில் புலன்களை வெல்லும் சூட்சுமம் புரியும்.

வாழ்வின் உயர்விற்குரிய கலைகளை மனிதர்கள் கற்க வேண்டும். கலைகளால் கிட்டும் ஞானத்தைப் பெற்று வாழ்வுநெறியை அடைந்திட வேண்டும். கலைகளைக் கற்று ஞானத்தில் தோய்ந்த ஞானிகளோடு ஒட்டி உறவாடி அவர்களோடு பழக வேண்டும். வாழ்வுநெறி நம்வசமாகும். புறம்பேசாதிருத்தல் மிகவும் நன்று. புறம் பேசுவதால் பல கொடுமைகள் நேரிடும். வாழ்வுநெறி தடம் புரளும், செய்கின்ற ஒவ்வொரு செயலையும் நன்கு ஆராய்ந்து செய்ய வேண்டும். செயலின் விளைவுகளை உன்னிப்பாகக் கவனித்துச் செய்ய வேண்டும். அவ்வாறில்லையெனில், வேதனைக் குழியில் வீழ்வோம். அதனிலிருந்து மீண்டுவரும் வழியினையும் அறியமாட்டோம். விளைவுகளை நன்கு ஆராய்ந்து செய்திடல் மனிதனின் உயர்வான வாழ்விற்கு உயர்வான நெறியாகக் கருதப்படுகின்றது. அப்பர் பெருமான் காட்டிய வாழ்வுநெறிகளை நாம் நமது வாழ்வில் என்றுமே கடைபிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

திருச்சிற்றம்பலம்!

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – II

(தமிழாகரர். தெ. முருகசாமி)

மூன்கட்டுரையில் எழுத்ததிகார இலக்கணப்படி, ண், ம். எழுத்துக்கள் ஒன்றி நின்று உணர்த்தும் பாங்கயையும் காவிரி, காவேரி என ஒரே பொருளில் வரும் சொற்கள் உரைநடைக்கும் இசைநடைக்குமான உச்சரிப்பு வேறுபாட்டையும் உணர்ந்தோம். மீண்டும் அவ் எழுத்ததிகாரத் தொடர்ச்சியில் எழுத்துத் திரிபாலும் குற்றியலிகர ஓசை குறையாலும் அமையும் இலக்கணத்தைக் கதைப்பாங்கோடு பொருத்தி உணர்வோமாக!

தொல்காப்பிய எழுத்ததிகாரம் – எழுத்துப்புணர்ச்சி பற்றி மிகுத்துக்கூறும் ஒரு பகுதியாகும். அந்த வகையில் நிலைமொழி வருமொழிச் சொற்களின் புணர்வுக்கேற்ப எழுத்துக்கள் திரிதல், தோன்றல், கெடுதல் என்ற முத்தரப்பில் மாற்றம்பெறும் என்பதைக் கீழ்வரும் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது.

மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே. (புணரி.7)

இங்ஙனமான மூவகைத் திரிபுகளும் பொருளடிப்படையில், வேற்றுமை குறித்தும் வேற்றுமை அல்லாத நிலையிலுமாகச் சொற்கள் நிலைமொழி வருமொழியாகப் புணருங்கால் எழுத்துத் திரியும் என்க!

கடல் + கரை = கடற்கரை. கடலினது கரை என வேற்றுமைப் பொருள் தருதற்கேற்ப லகரம் றகரமாக மெய்ப்பிறிதலாயிற்று. அதாவது திரிந்தது.

இந்த மெய்பிறிதல் அடிப்படையில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில்,

காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனஏத்திச் சின்மலர் கொடுதூவி
அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினர், (61 - 64)

எனத் திருமண வாழ்த்தாகக் கூறும்போது கண்ணகியைக் "காதலற் பிரியாமல்" என வாழ்த்துவதுதான் எழுத்திலக்கண மெய்ப்பிறிதலானதாகும்.

திருமணத்தில் மணமகன் மணமகளைச் சேர்த்து வாழ்த்துவதாகக் கூறாத இளங்கோவடிகள், கதைப் போக்கிற்கேற்பத் திட்டமிட்டே கண்ணகியை மட்டும் வாழ்த்துவதாக அமைப்பதில்தான் எழுத்திலக்கண மாட்சி துளிர்க்கிறது.

காதலன் பிரியாமல் என்பதுதான் காதலற் பிரியாமல் எனக்கூறப்பட்டுள்ளது. இது காதலனைப் பிரியாமல் என்ற இரண்டாம் வேற்றுமைப் பொருளைத் தரும்.

காதலன் பிரியாமல் என்பதாகவே இருந்திருந்தால் காதலனாகிய கணவன் பிரியாமல் என எழுவாய்ப் பொருளில் கோவலனுக்குக் கூறுவதாக அமைந்துவிடும்.

மகளிர் வாழ்த்தும் வாழ்த்து, கண்ணகிக்காக மட்டுமே அமைவதால் அவள் காதலனைப் பிரியாமல் எனக் கண்ணகியைப் பற்றியதாகவே அமைந்து பொருள் காண வேண்டியே காதலற் பிரியாமல் எனக்கூறப்பட்டது.

இதில் உள்ள கதைப்பாங்கை நுட்பமாக உணர வேண்டும். கதைப்படிக் கணவனாகிய கோவலனே பிரிந்தாலும் அப்பிரிவால் கோவலன் துன்பமடையாமல் மாதவியைக் கூடி இன்பமடைவதும், கண்ணகி துன்பமடைவதுமான அவலச்சுவையால் காதலனைக் கண்ணகி பிரியாமல் என்ற கருத்தின் ஆழத்தில் மகளிர் வாழ்த்தை இளங்கோ அமைத்தார் எனலாம்!

கணவனைக் கண்ணகி பிரிந்ததால், மங்கல அணியைத் தவிர பிற அணிகலன்களை அணியாதவளாகவும் நல்லறங்களையும் சான்றோர்களையும் விருந்தோம்பாமையுமாகிய துன்பத்தால் இல்லறக் கடமைகளைச் செய்ய முடியாதவளாகவும் இருந்த துன்பியல் வாழ்வு – நாடகவ்கையில் காப்பியத்தில் கொடிகட்டிப் பறக்கிறது. இதனால் கணவனைப் பிரிந்ததிலிருந்தே கண்ணகியடைந்த தொடரான தொல்லைபோலக் கணவனாம் கோவலனுக்கு இல்லை. அவன், சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடியதால் எல்லாம் இழந்ததாகக் கண்ணகியிடம் கூறி வெட்கப்பட்டாலும், கண்ணகியைப் பிரிந்ததிலிருந்தே துன்பத்தைத் தொடர் துன்பமாக அனுபவிக்காமல் மாதவியோடு இன்புற்று இல்லறம் நடத்தி, மகளொருத்தியைப் பெற்றதெல்லாம் அவனின் இன்ப வாழ்வைப் பறைசாற்றுவதால்தான், அவன் அவளைப் பிரிந்ததைவிட

அவள் அவனைப் பிரிந்ததான அவலச்சுவையைக் கூட்டிக்காட்டும்நாடக உத்தியாகக் "காதலற் பிரியாமல்" எனக் கண்ணகியானவள் கணவனைப் பிரியாதிருக்க மகளிர் வாழ்த்தியதாக இளங்கோ காட்சியை அமைத்தார் என்க!

மேலும் ஈண்டு இன்னொரு வகையாகச் சிந்தித்தாலும் கண்ணகியின் அவலத்தைக் கூட்டிக்காட்டவே எழுத்திலக்கணத்தைத் தக்காங்கு உணர்த்தினார் இளங்கோ எனலாம்.

அதாவது மணமக்களை வாழ்த்துவதாக இருந்தால் "காதலர் பிரியாமல்" என்றே கூறியிருக்கலாம். அங்ஙனம் இன்றிக் கண்ணகியின் அவலத்தைச் சுட்டவே காதலன் பிரியாமல் எனக் கூறுவதைத் தவிர்த்து மெய்பிறிதாதல் என்ற இலக்கணப்படிக் காதலற் பிரியாமல் எனப்பட்டது.

மேலும் ஈண்டு மற்றுமோர் இலக்கண நுட்பம் தவிர்க்கப்பட்டதையும் உணரலாம். காதலர்ப் பிரியாமல் எனக்கூறவும் வாய்ப்புண்டானும் காதலர் என்றது பன்மைக்குரியதாகவும் அமைந்துவிடுவதால் அந்த ஒருமை, பன்மைப் பொருள் மயக்கத்தையும் தவிர்த்துத் தெளிவாக ஒருமையைச் சுட்டும் விதமாகவே காதலற் பிரியாமல் எனப்பட்டது.

காதலர்ப் பிரிந்த மாதர் நோதக என அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் (58) கண்ணகியைப் போலவே பூம்புகார் நகரத்தில் பெண்கள் சிலர் காதலரைப் பிரிந்து வருந்திக் காணப்பட்டதாக இளங்கோவடிகள் கூறுகிறார். இவ்விடத்தில் காதலர்ப் பிரிந்த மாதர் - என்றது பன்மைக்குப் பன்மையாய் அமைந்தது. இதுபோல் கண்ணகியை வாழ்த்தும் நிலையில் காதலர்ப் பிரியாமல் எனப் பன்மையில் கூற முடியாதாகையால் ஒருமைக்கு ஒருமையை உணர்த்தும் வகையிலேயே காதலற் பிரியாமல் என்பதை எல்லாவிதமான எழுத்திலக்கணப்படிக் கதையைத் தழுவியபாங்கில் இளங்கோ உரைத்தார் எனலாம்.

இந்த மெய்பிறிதாதலான எழுத்துத்திரிதலை வள்ளுவர் "கொழுநற் றொழுதெழுவாள்" (55) எனக் கூறிய குறள் தொடரிலிருந்தும் உண்மை உணரலாம்.

கொழுநன்தொழுதெழுவாள் - எனும்போது கொழுநனானவன் தொழ, மனைவி எழுவாள் என்று பொருள்படும்படியாகவும் ஆகிவிடும் என்பதால் அந்த எழுவாயைச் செயப்படு பொருளாய்ப் பொருள் உணரவே எழுத்து மெய்பிறிதாகத் திரிக்கபட்டுக் கொழுநற்றொழு தெழுவாள்

எனப்பட்டதை மேலே இளங்கோவின் காதலற் பிரியாமல் என்பதோடு பொருத்தி உணரலாம்.

இங்ஙனம் எழுத்துத் திரிதலை உணர்த்திய இளங்கோ, சொற்களின் புணர்ச்சியால் உருவாகிய குற்றியலிகரத்தைக் கொண்டு பொற்கொல்லனின் செயலை வெளிப்படுத்துவது சிறப்பாக உள்ளது.

தமிழ்மொழியின் எழுத்துப் பகுப்பைத் தொல்காப்பியர் முதலெழுத்து, சார்பெழுத்து என இரண்டாகக் கூறினார். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற மூன்றும் சார்பெழுத்துக்கள். குற்றிய லிகரம் பற்றிக் கூறுகையில் அது ஒரு சொல்லில் வருவதுடன் புணர்மொழியிலும் வரும் என்றார். கேட்பாயாக, செல்வாயாக என ஏவல்நிலையில் கேண்மியா, சென்மியா என்ற சொற்கள் ஒரு மொழிக் குற்றியலிகரம்.

ஆனால் வருமொழி நிலைமொழியாகச் சொற்கள் புணர்கையில் நிலைமொழி குற்றியலுகரச் சொல்லாக இருந்து வருமொழியில் யகரத்தை முதலாகக் கொண்ட சொல்லுடன் சேர்ந்தால் நிலைமொழிக் குற்றியலுகரமானது குற்றியலிகரமாக மாறிவிடும். அதாவது நிலைமொழியும் வருமொழியும் ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய சொல்லாக இருந்து புணரும் போதுதான் குற்றியலிகரம் உருவாகும். இந்தச் சொற்களைப் போலல்லாத பிற வருமொழி நிலைமொழிச் சொற்களால் குற்றியலிகரம் உருவாகாது. இந்த அடிப்படையில் நாடு +யாது = நாடியாது என்ற சொற்புணர்ப்பை உணரலாம்.

நாடு - நெடில்தொடர் குற்றியலுகரம், யாது - என்பது வருமொழி. இதில் நாடு என்பதன் உகரம் இகரமாகிவிடும். இந்த உகரம், யகர வருமொழியால் இகரமாய் உச்சரிக்கப்படும். இதனால் இச்சொல்லுக்கு அதாவது நாடியாது என்ற சொல்லுக்கு எந்த நாடு என்பது பொருளாகும்.

ஆனால் கையிலுள்ள நாடி பிடித்து அதன் ஓசையை அறிதற்காகக் கூறும் நாடியாது எனும் போது இச்சொல்லைக் குற்றியலிகரமாகக் கருதக்கூடாது. இதில் நாடி என்பது கைநாடியைக் குறிக்கும் முழுச்சொல், நாட்டைக் குறிக்கும்போது நாடு என்ற குற்றியலுகரச் சொல்லின் திரிபாக நாடியாது என்பதை உணர வேண்டும். இப்படி நிலைமொழிக் குற்றியலுகரமாய் இருந்து யகரத்துடன் சேரும் போது உருவாகும் குற்றியலிகரமான சார்பெழுத்தை இளங்கோவடிகள் கதை தழுவிய பாங்காகப் பொற்கொல்லனின் கூற்றில் வைத்துக் காட்டியது அவனின் மனிதப் பண்பிழந்த குறைபாட்டைச் சுட்டி உரைப்பதாக உள்ளது.

கோவலன் விற்க எடுத்துவந்த சிலம்பைப் பார்த்ததும் பொற்கொல்லன், தன் மனச்சாட்சியுடன் பேசுகிறான்.

"கரந்தியான் கொண்ட காலணி ஈங்குப்
பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவன் யான்" - (கொலைக்.127-9)

ஈண்டு, கரந்து யான் கொண்ட என்ற சொற்களே கரந்தியான் கொண்ட என்ற குற்றியலிகரமாய் நின்று , பொற்கொல்லனின் மனோ நிலை, அரண்மனைச் சிலம்பைத் திருடிய செயற்பாடுகள் முதலிய யாவற்றையும் வெளிப்பட உணர்த்துமாறுள்ளன.

கரந்து எனும்போதான குற்றியலுகரம் ஒருநிலை. அது கரந்தி எனக்குற்றியலிகரமானது மற்றொரு நிலை. ஒன்றே மற்றொன்றாக மாறுகிறது. மாறும் இரண்டிலும் எழுத்து வடிவ மாறுதலும் ஓசை குறைபாட்டின் ஒற்றுமையும் ஒருசேர அமைந்ததைக் கருத்தில் கொண்டால் கதை தழுவிய பாங்கில் பொற்கொல்லன் ஒருவனே அரண்மனைச் சிலம்பைத் திருடிப் பண்பாட்டுக் குறைபாட்டைச் செய்தது போலக் கோவலன் கொண்டுவந்த சிலம்பைக் கொண்டு தன் திருட்டை மறைக்கக் கருதிய பண்பாட்டுக் குறையையும் செய்தான் என ஒப்பிட்டுணரலாம்.

அதாவது குற்றியலுகரமாய் இருந்தபோது ஓசைக்குறைவாக இருந்ததுபோலவே குற்றியலிகரமாய் மாறியபோதும் அதே ஓசை குறைபாட்டையே உணர்த்தியதுபோலப் பொற்கொல்லன் இருவேறு சிலம்புகளைக் கையாண்ட திறத்தால் குறைபட்டுக்கொண்டான் என்பதை இளங்கோ எழுத்திலக்கணத்தால் உணர்த்தினார் எனலாம். குறிப்பாகக் குற்றியலுகரத்தின் முன் யகரம் வரவேண்டும் என்பதற்கேற்பவே இளங்கோவடிகள் பொற்கொல்லன் கூற்றில் "யான்" என்ற சொல்லை நேர்த்தியாகக் கையாண்டார்.

நுணலும்தன் வாயால் கெடும் என்பதற்கேற்பப் பொற்கொல்லனின் கூற்றாலேயே அவன்தான் அரண்மனைச் சிலம்பு திருடிய கள்வன் என்பது உறுதிப்பட்டு அவன் எல்லோருடைய பழிப்புக்கும் ஆளாவதற்கேற்பக் குற்றியலுகர, குற்றியலிகர இலக்கணத்தால் அவனின் குறைபாட்டை உணர்த்திய நுட்பம், இளங்கோவின் தொல்காப்பியப் புலமையைப் புலப்படுத்தியதோடு அவரின் நாடகத்திறன் உத்தியை என்னென்பது என்பதே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்பதற்கொரு மணிமகுடமாம் எனலாம்!

நம்பிக்கை...!

(கவிச்சுடர். அழகுதாசன்)

- நம்பிக்கை என்பது
நடைத்தடம்
நாம் அதன் நெஞ்சில்
நட்டு வைப்போம்
ஓர் கொடி மரம்!

- முன்னேறத் துடிக்கும்
முயற்சி யாளர்களுக்கு
மாசில்லாது
வழங்கும் மூச்சுக் காற்று!

- தலைப்பாகை கட்டிய
தனித்துறவி
சீர்மிகு,
வங்கத்தின் வரலாறு
விவேகானந்தர்!
"உன்னை உயர்த்தும் சக்தி
உன்னுள் உள்ளது" என்றார்
அவர்
ஆன்மீகம் மனிதம்
சமச்சீர் அளவில் கலந்து
அற்புதம் செய்தார்!

- மூட நம்பிக்கையில்
மூழ்கும் எவரும்
மகுடம் சூடியதில்லை
நாம்
கற்றுக் கொண்ட பாடம்!
அது
கோழைகளையே
உற்பத்தி செய்யும்
கொடுமையான கூடம்!

- அடி மனத்தில்
எழுந்துவரும் கீதம்தான்
நம்பிக்கை ஊற்றுகள்!
அவை,
நம்பியவர்களைச்
சாதனை படைக்க வைக்கும்
ஆற்றலெனும் தூண்கள்!

- துணிந்து நிற்கும்போது
நமக்குத்
தோல்வி என்பது
தொலையும்!
அது,
வெற்றி விளைச்சலைத் தரும்
ஓர்
வீர மகாசக்தி!
அதுதான் ;
வளமான வாழ்க்கைக்கு
வழிகாட்டும்
புதியதோர் உத்தி!

- நம்பிக்கை என்பது
நாம்
கற்றுக்கொள்வதற்குரியது!
வெற்றி என்பது
நாம்
பெற்றுக்கொள்வதற்குரியது!

- முயற்சி செய்து
அடியெடுத்து
முன் வைப்போம்!
அதன்மூலம்
நம்பிக்கையின்
நாற்றங்கால்களை
நாம்
நட்டுவைப்போம்!

மொரிசீயஸ் நாட்டுக்குச் செல்லும் திருவள்ளுவர் சிலைக்கு குன்றக்குடியில் வரவேற்பு....


மொரீசியஸ் நாட்டில் மோக்கா நகரில் அமைந்துள்ள மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்திற்கு அன்பளிப்பாக வழங்க தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பாக ஏறக்குறைய 2000 கிலோ எடையில் நான்கு அடி உயரத்தில் கருங்கல்லால் திருவள்ளுவர்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை 15.07.2016 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு குமரிக் கடற்கரையிலிருந்து அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் புறப்பட்டு நெல்லை, விருதுநகர், மதுரை, திருப்புத்தூர் வழியாக 18.7.2016 திங்கள் கிழமையன்று காலை 9 மணியளவில் குன்றக்குடிக்கு வந்தடைந்தது. அதுபோது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் - திருவருள்திரு மகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் திருவள்ளுவர் சிலையை வரவேற்று சிறப்புச்செய்து வழியனுப்பி வைத்தார்கள். பள்ளி மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருக்குறள் நாவை. சிவம் அவர்களுக்கு மதிப்புறு முனைவர் பட்டம்

உலகத் திருக்குறள் பேரவை தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மக்கள் சிந்தனை இதழின் நெடுநாளைய உறுப்பினரும், "தமிழேகுறி! குறளே நெறி!" என்ற கொள்கையில் மணற்பாறை - திருக்குறள் பயிற்றகத்தின் வழி கடந்த அரை நூற்றாண்டாய் தூய தமிழும், திருக்குறளும் பரப்பி வருபவருமான - திருக்குறள் புலவர் நாவை.சிவம் அவர்களின் தமிழ் இலக்கியத் தொண்டைப் பாராட்டி, அமெரிக்கா - உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில், மதுரையில் தி.பி. 2047, மேழம்.28 (10.4.2016) நிகழ்த்திய பட்டமளிப்பு விழாவில், "மதிப்புறு முனைவர்" எனும் பட்டம் வழங்கிச் சிறப்புத் தந்துள்ளது. இந்திய அரசின் தலைமை வங்கியின் தமிழக, புதுவை இயக்குநர். முனைவர் சே. சதக்கத்துல்லா தலைமை ஏற்றார். உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தலைவர் முனைவர். செல்வின் குமார் பட்டம் வழங்கி வாழ்த்திப் பேசினார். மணிமேகலை பதிப்பக இயக்குநர் இரவி தமிழ்வாணன் வரவேற்றார். அன்புறு அனுசுயா நன்றி நவின்றார்.

மக்கள் சிந்தனை இதழ் திருக்குறள் புலவர் நாவை. சிவம் அவர்களை வாழ்த்துகிறது; பாராட்டி மகிழ்கிறது.

உலகத் திருக்குறள் பேரவை - தூத்துக்குடி



உலகத் திருக்குறள் பேரவை -தூத்துக்குடிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவையின் மாதாந்திரக் கூட்டம் பேராசிரியர் சு. அழகேசன் தலைமையில் அரு.அ.சீதனபாலன் முன்னிலையில் சி.எம்.மேனிலைப்பள்ளி அரங்கில் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவையின் மாவட்டச் செயலாளர் "திருக்குறள்" மோ. அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

ஆசிரியர் மனோசேவியர் "மனத்துக்கண் மாசிலன்ஆதல்" என்னும் தலைப்பில் குறளுரை பேசினார்.

செய்யதுமுகமதுசெரிப் "திருக்குறளில் இசுலாமியம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

கீழூர் கூட்டுறவு வங்கியில் பணியாற்றி பணிநிறைவு பெற்ற இரா.இலக்குமணனுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. திருவைகுண்டம் வட்டம், சிவகளை ஊரில் வசித்த தமிழ்ப் பற்றாளர் கரையாளர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

2. உத்திரகாண்ட் மாநிலத்தைச் சார்ந்த மாநிலங்களவை உறுப்பினர் தருண்விசய் அவர்கள் திருவள்ளுவர் சிலையைக் கங்கைக்கரை அரித்துவாரில் நிறுவியதற்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

3. உத்திரகாண்ட் மாநிலத்தில் திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த வடமாநிலத்தைச் சார்ந்த சாமியார்கள் பொதுமக்களுக்கு இக்கூட்டம் கண்டனத்தைத் தெரிவித்தது.

4. மத்திய அரசின் தமிழகப் பள்ளிகளில் சமசுகிருத மொழியில் வேதபாடத்தை கற்பிப்பதற்கும், இராமயண, மகாபாரத புராணக் கதைகளை கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிற மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் செயலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் குருலெட்சுமி, குமரிக்கண்ணன், பேரவை உறுப்பினர்கள் அறிவுச் செல்வம், அண்ணாமலை, தாழை மணி, கனகலெட்சுமி, சுந்தரி, செல்வி, சூரியா மற்றும் தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள்.

இரா. இலக்குமணன் ஏற்புரை நிகழ்த்தினார்.

கவிஞர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் க. பாஸ்கரன் அவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி. மும்பைத்மிழ்ச் சங்கம் 25.6.2016



தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர். க.பாஸ்கரன் உடன் மும்பைத் தமிழ்ச்சங்க நிர்வாகிகள், கவிஞர் பரணி, (இராமமூர்த்தி) பாலு, வதிலை பிரதாபன் மற்றும் பலர்.

உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர்
தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள்
திருவள்ளுவர் திருவுருவச் சிலையை
அரித்துவாரில் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு
நன்றி தெரிவித்து நாளிதழ்களுக்கு அனுப்பிய செய்தி

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற தாரக மந்திரத்தை உலகத்திற்கு வழங்கிய திருவள்ளுவரின் சிலையை உத்ரகாண்ட் மாநிலம் ஹரித்துவாரில் நிறுவுவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் குறித்து ஒட்டு மொத்த தமிழ்மக்களின் உணர்வுகளும் மிகுந்த வேதனையை அடைந்துள்ளது.

திருவள்ளுவரின் பெருமையை தமிழர்களாகிய நாம் உலகறியச் செய்யத் தவறிவிட்டோமே என்ற கவலை நம் நெஞ்சை வாட்டுகின்றது.

தற்போதைய நிலைமை, மீண்டும் திருவள்ளுவர் சிலை உரிய இடத்தில் நிறுவப்படும் என்று மாண்புமிகு உத்ரகாண்ட் மாநில முதல்வர் ஹரீஷ் ராவத் அவர்கள் அளித்திருக்கும் உறுதிமொழி ஆறுதலைத் தருகின்றது. மாண்புமிகு உத்ரகாண்ட் மாநில முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உத்ரகாண்ட் மாநிலம் ஹரித்துவாரில் திருவள்ளுவர் சிலையை மீண்டும் உரிய இடத்தில் விரைவில் நிறுவ நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திமோடி அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

திருவள்ளுவர் சிலையை மீண்டும் உரிய இடத்தில் நிறுவ நடவடிக்கை மேற்கொண்டு பாரதப் பிரதமர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தமிழகத்தின் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும், அகில இந்திய தமிழ்ச்சங்கங்கள் கூட்டமைப்புக்கும், டில்லி தமிழ்ச்சங்கம், உத்ரகாண்ட் தமிழ்ச்சங்கம் முதலிய எல்லா தமிழ்ச்சங்கங்களுக்கும், திருக்குறள் அமைப்புகளுக்கும், தமிழறிஞர்களுக்கும், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களுக்கும் உலகத் திருக்குறள் பேரவை சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமிகு தருண்விஜய் MP அவர்களின் திருக்குறள் பணி தொடரட்டும் என்று வாழ்த்துகின்றோம்.

"என்று விழித்திடும் மனச்சாட்சி"

(பாவலர்மணி.புலவர். ஆ. பழநி)

விருத்தம்

உடன்பட மறுத்தாள் ஒருபெண் என்று
உக்கிரம் காட்டும் விடலைகள் இன்று
விடம்நிகர் அமிலம் அரிவாள் எடுத்து
வீசுதல் கண்டும் இன்னுமா உறக்கம்!

பல்லவி

மனிதம் எங்கே போகிறது?
மரணத்தின் பாதையிலா?
புனிதம் எங்கே போகிறது?
புதையுண்டு சாவதற்கா?

சரணம்

1. *பெற்றவள் அக்காள் மறுத்துரைப் பாளேல்*
பித்தர்கள் அரிவாள் தூக்குவரோ? - அயல்
மற்றவர் வீட்டுப் பெண்கள் மறுத்தால்
மலிவுச் சரக்காய்ப் போக்குவரோ? (மனிதம்)

2. *எனக்கே வேண்டும் இல்லையென் றாலது*
யாருக்கும் கூடவே கூடாது - இந்தப்
பிணக்கே வாழ்க்கையின் சாரமென் றாலிம்
மானுடம் என்றுமே தேறாது. (மனிதம்)

3. *பிள்ளையைப் பெற்ற தாயரிற் சிலர்க்குப்*
பேய்கள் மகனாய்ப் பிறந்தாரே - அந்தக்
கொள்ளிவாய்ப் பேய்கள் கொடுமையி னாற்சில
குமரியர் கரியாய் எரிந்தாரே! (மனிதம்)

4. *ஓநாய்க் கூட்டம் தாயரின் வயிற்றில்*
உருவெடுத் திங்கே வரலாமா? - அது
தீநாச் சுழற்றிக் குருதி குடிக்கும்
திமிரை அனுமதித் திடலாமா? (மனிதம்)

5. அரைநூற் றாண்டின் முன்னர் இதுபோல்
அநியாயம் ஏதும் கேட்டீரோ? இக்
குறைஎவ் வாறு வந்ததென் றறியக்
கூடிச் சிந்திக்க மாட்டீரோ? (மனிதம்)

6. பணத்தைத் தேடும் கல்வியைத் தந்து
பண்பா டொழுக்கம் அழித்தீர்கள்! - அவர்
குணத்தை இழந்தே ஆடினர் ஆட்டம்
வேறென்ன செய்து கிழித்தீர்கள்! (மனிதம்)

7. என்ன உறக்கம் மானுடக் குலத்திற்
கென்று விழித்திடும் மனச்சாட்சி?
அன்று தொலைந்திடும் நெஞ்சை எரிக்கும்
ஆசிட்டரி வாள் கொடுங்காட்சி! (மனிதம்)

வெறுப்பிலிருந்து விளைவது வேற்றுமை. அது காழ்ப்பையூட்டும். பகையை வளர்க்கும்; போரைத் தோற்றுவிக்கும்; தீராத தொல்லைகளையும் தரும். - அருள்நெறித்தந்தை

உ

குன்றக்குடி ஆதீனம் மகாகுருபூசை விழா

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வர் திருவருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளின் 691-ஆம் ஆண்டு மகா குருபூசைவிழா சிறப்பாக நிகழ்ந்தது.

துர்முகி ஆண்டு ஆவணித் திங்கள் 4-ஆம் நாள் (20.08.2016) சனிக்கிழமை பூரட்டாதித் திருநாளில் திருவண்ணாமலையில் உள்ள ஆதி குருமுதல்வர் குருமூர்த்தத்தில் சிறப்பு வழிபாடும், அன்பர்கள் திருக்கூட்ட ஊர்வலமும் சிறப்பாக நடைபெற்றன. மறுநாள் ஆவணித் திங்கள் 5-ஆம் நாள் (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை குன்றக்குடியில் சமய இலக்கிய விழாச் சிறப்பாக நடைபெற்றது. 21.08.2016 காலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை குருமூர்த்த வழிபாடு, அருள்தரு காளத்திநாதர் சிறப்பு வழிபாடு, அருள்தரு சண்முகநாதப் பெருமான் வழிபாடு ஆகியன நடைபெற்றன. 8.30 மணியளவில் குருமுதல்வர் திருவுருவப்படம் திருவீதி உலா எழுந்தருளியது. அது போது நூற்றுக்கணக்கான பொதுமக்களும், பள்ளி மாணவ, மாணவியரும் திருவீதி உலாவில் கலந்துகொண்டனர்.

காலை 10.00 மணியளவில் ஆதீனக் கொலுமண்டபத்தில் தொடக்க விழா - நூல் வெளியீட்டு விழா தொடங்கியது. திரு.அரு. மாசிலாமணி ஓதுவார் இறைவணக்கம் பாடினார். 46-வது குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் விழாத் தலைமையேற்றார்கள். திரு.முனைவர்.எஸ். மோகன் தொடக்கவுரை ஆற்றினார். குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் எழுதிய "அன்பே வாழ்வு" என்ற நூலை, சென்னை உயர்நீதிமன்ற மேதகு நீதியரசர், திருமிகு. ஆர். மகாதேவன் அவர்கள் நூலை வெளியிட்டு அருமையானதொரு சிறப்புரை வழங்கினார். நூலை அருள்திரு கோவிந்தானந்த சுவாமிகள் அவர்களும், திரு. டாக்டர். K. பாலகிருஷ்ணன் அவர்களும் பெற்றுக்கொண்டனர். பேராசிரியர்.டாக்டர்.அய்க்கண் அவர்கள் நூல் திறனாய்வுரை ஆற்றினார். முனைவர் சுந்தரஆவுடையப்பன் அவர்கள், சிறப்புச் சொற்பொழிவாற்றினார். குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி உரையுடன் முற்பகல் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவெய்தியது.

பிற்பகல் 2.30 மணியளவில் தேவார இசைமாமணி குழிபிறை ஓதுவார்திரு. S. அருணாசல தேசிகர் குழுவினரின் திருமுறை இசையரங்கு செவிக்கும், சிந்தைக்கும் விருந்தாக அமைந்தது.

பிற்பகல் 4.00 மணியளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் மதுரை, அரவிந்த் கண் மருத்துவமனை, திரு.டாக்டர்.பெ.நம்பெருமாள்சாமி அவர்களுக்கு "மனிதநேய மருத்துவ மாமணி" பட்டமும், திருமதி. டாக்டர். கோ. நாச்சியார் அவர்களுக்கு, "மனிதநேய மருத்துவத் திலகம்" பட்டமும் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தருளினார்கள்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு.முனைவர்.க. பாஸ்கரன் அவர்களும் குன்றக்குடி த.கு.அ.மகளிர் கல்வியியல் கல்லூரிச் செயலர் திரு.முனைவர். எஸ். மோகன் அவர்களும் பாராட்டுரை வழங்கினர். பாராட்டுப் பெற்ற திரு.டாக்டர்.பெ.நம்பெருமாள்சாமி அவர்கள், ஏற்புரை வழங்கினார். திரு.டாக்டர்.சொ. சேதுபதி அவர்கள் நிகழ்ச்சி இணைப்புரை வழங்கினார். நன்றியுரைக்குப் பின் மங்கல வாழ்த்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

இரவு 7.00 மணியளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்து நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு அருளாசி வழங்கி, குருவருள் பிரசாதம் வழங்கி அருளினார்கள்.



பசு, நாம் கொடுக்கும் தீனியைத் தின்று புல்லை மேய்ந்து வாழ்கின்றது. தன்னுடைய வாழ்வுக்குரிய அளவிற்கு எடுத்துக்கொண்ட உணவுப் பொருளில் ஒரு பகுதியை இரத்தமாக்கிக் கொள்கிறது. எஞ்சியதைப் பாலாக்கிச் சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிடுகிறது. மரங்களும் தாம் உயிர் வாழ்வதற்குத் தேவையானது போக எஞ்சியதைக் காயாக - கனியாகச் சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிடுகின்றன. மனிதனிடத்திலும் இந்த உயர்ந்த பழக்கம் வரவேண்டும். பசு பால் கொடுக்கும் - தென்னை காய் கொடுக்கும் என்பது போல மனிதன் வாழ்வு கொடுப்பான் என்கிற வழக்கு நடைமுறைக்கு வரவேண்டும்.

- அருள்நெறித்தந்தை

நிறங்கள் ஓர் ஐந்துடையாய்!

சைவப்புலவர்.அ.ச.தமிழ்ச்செல்வி,
சேக்கிழார் சிவநெறிக்கழகம், பொன்புதுப்பட்டி

மணிவாசகப்பெருமான், இறைவனைச் சிவபுராணத்துள் "நிறங்கள் ஓர் ஐந்துடையாய், மறைந்திருந்தாய் எம் பெருமான்" எனக் குறிப்பிடுகிறார். இந்த ஐந்து நிறங்களும் என்ன, என்ன, என்பதனைத் திருமூலர் அழகாகத் தெளிவாக தனது திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

சதாசிவக் கடவுளுக்கு திருமுகங்கள் ஐந்து ஆகும். ஐந்து முகங்களும், உச்சி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் திசைகள் ஐந்தும் நோக்கி விளங்குகின்றன. இவ்வைந்து திருமுகங்களின் வண்ணங்கள் முறையே வருமாறு ....

உச்சி முகம், பளிங்குநிறம்;
கிழக்கு முகம், குங்குமநிறம்;
தெற்கு முகம், நீலவர்ணம் (நிறம்)
வடக்கு முகம், செவ்வரத்தம் (நிறம்)
மேற்கு முகம், பால்நிறமாகும்

இந்த ஐந்து முகங்களும் அடியேனுக்கு அருளுதல் பொருட்டு சதாசிவமூர்த்தி கொண்டனவாகும் என்று திருமூலர் கூறுகிறார். மேலும் இறைவனின் ஐந்து முகங்களும் அடியேனுக்கு அருளுதல் பொருட்டு சதாசிவமூர்த்தி கொண்டனவாகும், என்று திருமூலர் கூறுகிறார். மேலும் இறைவனின் ஐந்து திருமுகங்களின் வரிசைக் கிரமத்தையும் கூறுவதாகப் பொருள் கொள்வர். அதாவது

நடுமுகம்	-	ஈசானம்	-	படிகநிறம்
கிழக்குமுகம்	-	தற்புருடம்	-	மஞ்சள்குங்குமநிறம்
தெற்குமுகம்	-	அகோரம்	-	நீலநிறம்
வடக்கு முகம்	-	வாமதேவம்	-	செவ்வரத்தம் நிறம்
மேற்கு முகம்	-	சத்தியோசாதம்	-	பால்நிறம்

என்று.

<u>திருமந்திரம். பாடல் 1705. சதாசிவ லிங்கம்.</u>

நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கும வண்ணம்;
அடைவுள அஞ்சனஞ் செவ்வரத்தம் பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே! - திருமந்திரம்

மாணிக்கவாசகர் குறிப்பாக நிறங்கள் ஓர் ஐந்து டையாய் எனக் கூறியதைத் திருமூலரானவர் நன்கு விளக்கமாகவே, எத்தனை முகங்கள் அவை எத்திசை முகங்கள், அவை எவ்வண்ணமுகங்கள் என்று தெளிவாகவே விளக்குகிறார். இந்த இருவரும் சொன்ன ஐந்து நிற வண்ணனாகிய சிவபெருமானை, சிவலிங்கத்தை நாம் இன்றும் கும்பகோணம் அருகில் உள்ள நல்லூர் திருத்தலத்தில் காணலாம். இந்த சிவலிங்கத் திருமேனியில் ஒவ்வொரு நாளும் காலை சூரிய உதயம் எட்டு மணியில் இருந்து மாலை வரை 2 மணிக்கு ஒருவண்ணமாக இந்த ஐந்து வண்ணங்களும் மாறிமாறிக் காணப்படுகின்றன. அதாவது, அந்த ஒரே சிவலிங்கத் திருமேனியே 2 மணிக்கொருதரம் நிறம் மாறிக் காணப்படுகிறது. சுமார் முந்நூறு (300) அடிவரைக்கும் இந்தச் சிவலிங்கத் திருமேனியின் அருகில் ஆழத்தில் அறிவியல் முறையில் ஆராய்ந்து பார்த்தும், இந்த நிறம் மாறும் அதிசயம் என்ன என்று இதுவரை யாராலும் அறியமுடியவில்லை என்பது அறிந்த செய்தி. அறிவியலுக்கு அப்பால் இறைவன் இயற்றும் அற்புதங்களை யாரே அளவிட வல்லார்?

சிந்தனை வட்டம்...

காரைக்குடியில் நடைபெற்ற விழாவில் சமூகம் பேசியது மிகவும் மகிழ்வையும் கடைப்பிடிக்க வேண்டியதையும் படித்து நானும் நண்பர்களும் மகிழ்ந்தோம்...

"உதிரத்தை வேர்வையாக்கினால் உயரத்தை எட்டலாம்..."

உதிரத்தை வேர்வையாக்கி, நேர்மையை வாழ்க்கையாக்க வேண்டும், உதிரத்தை வேர்வையாக்கினால்தான் வாழ்க்கையில் நாம் நினைத்த உயரத்தை அடைய முடியும்.

ஒருவர் பிறருக்காக வாழ்வதுதான் வாழ்க்கை
உழைப்பால் ஈட்டிய உயர்வே சிறந்தது
இன்பம் – துன்பம் – என அனைத்து நிலைகளிலும்
இணைந்து வாழ்வதுதான் வாழ்க்கை.

சவால்களைச் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

உழைப்பால் எவரும் உயர முடியும்!

(உழை - பிழை - நிலை - தவத்தந்தையின் அமுத வாக்கு)

– நா. பாலசுப்பிரமணியன், கொத்தமங்கலம்

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங். 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி	:	*தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.*
பயிற்சி நேரம்	:	*பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.*
குறிப்பு	:	*ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.*

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Aug-Sep 2016

Price Rs. 8-00
Date of Publication 15-09-2016



பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி).

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166